DINAMALAR

2 JULY 2022

PAGE 1

# புதுச்சேரியில் ஜி.எஸ்.டி., தின விழா கொண்டாட்டம்

## அதிக வரி செலுத்திய நிறுவனங்களுக்கு விருது

**புதுச்சேரி, ஜூலை 2–** ஜி.எஸ்.டி., தின விழாவில் அதிக வரி கட்டிய நிறுவனங்கள், அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அதிகாரிகள் கவுரவிக்கப்பட்டனர்.

ஜி.எஸ்.டி., மற்றும் மத்திய கலால் புதுச்சேரி ஆணையர் அலுவலகம் சார்பில், 5வது ஜி.எஸ்.டி., தினம் ஓட்டல் ஜெயராமில் நேற்று கொண்டாடப்பட்டது.

புதுச்சேரி சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் மத்திய கலால் ஆணையக ஆணையர் பத்மஸ்ரீ வரவேற்று, ஜி.எஸ்.டி., வரி வருவாய் குறித்து பேசினார்.

பொதுப்பணித் துறை அமைச்சர் லட்சுமிநாராயணன், புதுச்சேரி பல்கலைக்கழக ஆய்வுத் துறை இயக்குனர் தரணிக்கரசு சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.



■ புதுச்சேரியில் நடந்த ஜி.எஸ்.டி., தின விழாவில், அதிக வரி செலுத்திய நிறுவனங்களுக்கு விருதுகளை, அமைச்சர் லட்சுமிநாராயணன் வழங்கினார். அருகில், ஜி.எஸ்.டி., மற்றும் மத்திய கலால் ஆணையக ஆணையர் பத்மஸ்ரீ.

விழாவில், அதிக ஜி.எஸ்.டி., வரி செலுத்திய நிறுவனங்கள் கவுரவிக்கப்பட்டன. சரக்கு பிரிவில் லெனோவா இந்திய நிறுவனம், சுந்தரம் பாஸ்டனர்ஸ் நிறுவனத்திற்கும், சேவைகள் பிரிவில் எஸ்.பி.ஐ., டெக்னாலஜிஸ் இந்தியா, பாரத் சஞ்சார் நிகம் லிமிடெட், சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் பிரிவில் நியூ இந்தியா அசோசியேட்ஸ், ஜி.எஸ்.டி., காம்போசிஷன் பிரிவில் பஞ்சாபி தாபா, ஏற்றுமதி பிரிவில் ஸ்ட்ரைட்ஸ் பார்மா சயின்ஸ் நிறுவனங்களுக்கு விருதுகளை, அமைச்சர் லட்சுமிநாராயணன் வழங்கினார்.

விழாவில், அர்ப்பணிப்புடன் துறையில் சேவையாற்றிய புதுச்சேரி ஆணையக சரக்கு மற்றும் சேவை வரி அதிகாரிகளுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.

விழாவில் புதுச்சேரி சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் மத்திய கலால் ஆணையக ஆணையர் பத்மஸ்ரீ பேசியதாவது:

புதுச்சேரி சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் மத்திய கலால் ஆணையகம், கடந்த 2021–22ம் ஆண்டு 601.16 கோடி ரூபாய் வரி வருவாய் ஈட்டியுள்ளது. இது, கடந்த 2020–21 நிதியாண்டை ஒப்பிடும்போது 63.30 கோடி ரூபாய் அதிகம்.

நடப்பு காலாண்டில் ஜூன் மாதம் வரை 192.04 கோடி ரூபாய் வரி வருவாய் ஈட்டியுள்ளது. இதே மாதம் வரை, கடந்தாண்டு 55.64 கோடி ரூபாய் மட்டுமே வரி வருவாய் எட்டப்பட்டு இருந்தது.

எனவே கடந்தாண்டை ஒப்பிடும்போது 40.80 சதவீதம் அதிகம்.

வரி செலுத்துவோரின் பங்களிப்பினால் தேசிய அளவில் இச்சாதனையை எட்ட முடிந்தது. வரி செலுத்தும் முறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன.

வரி செலுத்துவதற்கு எளிதான ஆலோசனைகளை வரவேற்கிறோம், நிறுவனங்கள், பொதுமக்கள் காலத்தோடு முறையாக வரி செலுத்தி நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்ய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் இணை ஆணையர் சதீஷ்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

DINAKARAN

2 JULY 2022

PAGE 2

# புதுவையில் ஜிஎஸ்டி நாள் விழா கொண்டாட்டம்

## அதிக வரி செலுத்தியோருக்கு விருது



புதுச்சேரியில் நடந்த ஜிஎஸ்டி நாள் விழாவில் அதிக வரி செலுத்தியோருக்கு அமைச்சர் லட்சுமி நாராயணன் விருது வழங்கினார்.

**புதுச்சேரி, ஜூலை 2:** தமிழ்நாடு மண்டலத்தின் ஜிஎஸ்டி மற்றும் மத்திய கலால் புதுச்சேரி ஆணையர் அலுவலகம் மூலம் 5வது ஜிஎஸ்டி நாள் விழா காமராஜர் சாலையில் உள்ள தனியார் ஓட்டலில் நேற்று கொண்டாடப்பட்டது. ஆணையர் பத்மஸ்ரீ வரவேற்று, புதுச்சேரி ஆணையகம் செயல்பாடுகள் குறித்து எடுத்துரைத்தார். சிறப்பு விருந்தினர்களாக பொதுப்பணித்துறை அமைச்சர் லட்சுமி நாராயணன், புதுவை பல்கலைக்கழக ஆய்வுத்துறை இயக்குனர் தரணிக்கரசு ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். அதிக வரி செலுத்தியோருக்கு விருதுகளும், சிறப்பாக பணிபுரிந்த புதுச்சேரி ஆணையக சரக்கு மற்றும் சேவை வரி அதிகாரிகளுக்கு பாராட்டு சான்றிதழும் வழங்கப்பட்டது.

விழாவில் ஜிஎஸ்டி மற்றும் மத்திய கலால் புதுச்சேரி அதிகாரிகள், அவர்களது குடும்பத்தினர் பங்கேற்று பல்வேறு கலைநிகழ்ச்சிகளை நடத்தினர். ஓய்வு பெற்ற அதிகாரிகள், அவர்களது குடும்பத்தினரும் கலந்து கொண்டனர். இணை ஆணையர் சதீஷ்குமார் நன்றி கூறினார்.